பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 21 திங்கட்கிழமை 23.02.2026 | அதிர்வு 205

## நாட்டை வந்தடைந்தது எரிவாயு ஏற்றிய கப்பல்

### தட்டுப்பாட்டுக்கு முடிவு



(விரிவான செய்தி 3 ஆம் பக்கம்)



# கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் லண்டன் சென்றடைந்தார் நாமல்

## கேம்பிரிட்ஜ் உரை இரத்தான போதும் ஏனைய நிகழ்வுகளில் அவர் பங்கேற்பு

புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தமிழ் மாணவர் சங்கங்களின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு லண்டன் சென்றடைந்துள்ளார்.

லண்டன் பௌத்த விஹாரையின் 100ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அவர் தனது பயணத்தைத் தொடங்கியுள்ளார்.

05

# நாமலுக்கு லண்டனில் நடப்பவை கடந்த காலச் செயல்களின் அறுவடை

## அரசு மீது பழிபோட வேண்டாம் என்று அமைச்சர் வசந்த சமரசிங்க பதிலடி

"நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ லண்டன் செல்வதற்கோ அல்லது அங்கு அவருக்கு எதிராகப் போராட்டங்கள் நடப்பதற்கோ தேசிய மக்கள் சக்தி அரசு பொறுப்பல்ல." என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

லண்டன் பயணத்தின் போது நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராகப் புலம்பெயர் அமைப்புகள் முன்னெடுத்து வரும் எதிர்ப்புகள் மற்றும் கேம்பிரிட்ஜ் உரை இரத்துச் செய்யப்பட்டமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் கூறுகையில்:-

05





இன்று நான் குறிப்பிடும் இந்த விடயங்களில் சம்பந்தப்பட்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவர்களின் பெயர், விவரங்கள் அல்லது அடையாளங்களை நான் குறிப்பிடப் போவதில்லை. அவற்றை வாசகர்களின் ஊகத்துக்கும் முடிவுக்கும் விட்டு விடுகிறேன்.

முதலாவது விடயம் நேற்று சாவகச்சேரியில் நடைபெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேராளர் மாநாட்டில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூறிய கருத்து.


அண்மைக் காலமாக ரணில் அரசில் மதுபான உரிமம் (பார் லைசென்ஸ் அல்லது பெர்மிட்) பெறுவதற்கு பரிந்துரைக் கடிதங்களை வழங்கி, அதற்காகப் பல கோடி ரூபாவை ஏப்பம் விட்ட அரசியல் தலைவர்கள் பற்றி மக்கள்

02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# மறவன்புலவுக்கு எதிராக சி.வி.கே. 50 ரூபா கோடி மானநஷ்ட வழக்கு

## முன் ஆயத்தமாக சட்டத்தரணி மூலம் கோரிக்கைக் கடிதம்





தம்மைக் குறித்து யாழ்ப்பாண ஊடக மையத்தில் கடந்த ஜனவரி 26 ஆம் திகதி மிக மோசமான குற்றச்சாட்டுகளை முன்வைத்து பகிரங்கமாக கருத்து வெளியிட்டமை மூலம் தமக்குப் பெரும் மான நஷ்டத்தை ஏற்படுத்தினார் எனத் தெரிவித்து சமூகப் பிரமுகர் மறவன் புலவு க சச்சிதானந்தத்துக்கு எதிராக 50 கோடி ரூபா மான நஷ்டம் கோரி சட்டத்தரணி மூலம் நிபந்தனை கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி. கே.சிவஞானம்.

தமது கட்சிக்காரரான சி.வி. கே.சிவஞானத்துக்கு எதிராக, அவருக்கு ஊறு ஏற்படுத்தும் தீய எண்ணத்துடன் செயல்பட்டு, தக்க – நியாயமான – காரணங்கள் எதுவும் இன்றி, வன்மமான முறையில் பொய்யுரைத்து, சமுதாயத்தில் அவருக்கு எதிராக எதிர்ப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், அவரின் நன்மதிப்புக்குக் களங்கம் ஏற்படுத்தும் விதத்திலும் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன் வைத்திருக்கிறார் மறவன்புலவு சச்சிதானந்தம் என்று இந்த நிபந்தனைக் கடிதத்தில் சிவஞானத்தின் சட்டத்தரணி கேசவன் சயந்தன் தெரிவித்திருக்கிறார்.

அடுத்த 14 நாள்களுக்குள் உரிய நஷ்ட ஈடு செலுத்தப்படாவிட்டால் மறவன்புலவு சச்சிதானந்தத்துக்கு எதிராக தகுந்த நியாயாதிக்கம் உள்ள நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என்று இந்த நிபந்தனைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றது.

1974 இல் நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வை யாழ் திறந்த வெளி அரங்கில் நடத்துவதற்கு இடம் அளிக்காமல் அயோக்கியத்தனமாக மறுத்ததன் மூலம் அந்நிகழ்வில் கொல்லப்பட்ட 11 அப்பாவி மக்களின் உயிரிழப்புக்கும் சிவஞானமே காரணம் என்ற சாரப்பட மறவன்புலவு சச்சிதானந்தம் இந்த ஊடக மாநாட்டில் சரமாரியான குற்றச்சாட்டுகளை சுமத்தி இருந்தார்.

அதற்கு எதிராகவே மான நஷ்ட வழக்கு தொடர சிவஞானம் தயாராகி வருகிறார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

தாராளமாகப் பேசுகிறார்கள். அது குறித்து செல்வம் அடைக்கலநாதன் நேற்றைய தமதுரையில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார்.

தமிழ்த் தேசியத் தரப்பில் உள்ள கட்சிகள் இந்த பார் பெர்மிட்டுகளை பெற்றன என்றும், ஆனால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் எந்த நாடாளுமன்ற உறுப்பினரும் அதனைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் அடித்துக் கூறினார்.

அப்போது எம்.பியாக இருந்த நீதியரசர் விக்னேஸ்வரன் தாம் ஒரு தரப்புக்கு அந்த அனுமதி பெறுவதற்கு பரிந்துரைத்தார் என்றும், ஆனால் அதற்கு யாரிடமும் பணம் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் உறுதிப்படத் தெரிவித்தார். நேர்மையாகக் கருத்து கூறிய அவர் அதற்காகப் பாராட்டப்பட வேண்டியவர்.

அவருக்கு அப்பால், தமிழர் தரப்பில் அந்த பார் பெர்மிட் பெற்றவர்கள் யார் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளட்டும்.

இனி, அடுத்த விடயத்துக்கு வருகிறேன்.

இது எதிர்க்கட்சி எம்.பிக்கள் சம்பந்தப்பட்டது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தரப்பில் ஒரு தகவல் வெளியிடப்பட்டதாக 'மவ்ரட்ட' செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

எதிரணியில் உள்ள மூன்று எம்.பிக்கள் எதிர்க்கட்சித் தரப்புகள் ஒன்றுபட்டு செயல்படுகின்ற – முன்னெடுக்கின்ற – திட்டங்கள், நடவடிக்கைகள் குறித்து முற்கூட்டியே அரசு தரப்புக்குச் செய்திகளை – தகவல்களை – 'லீக்' செய்து விடுகிறார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்திருக்கின்றது. அந்த மூவரும் தங்களது ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்றும், அவர்களின் இந்த நடவடிக்கைகள் காரணமாக எதிர்காலத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்று கூடித் திட்டமிடும் அரசியல் நடவடிக்கை தொடர்பான கூட்டங்களுக்கு அவர்களை அழைப்பதில்லை என்றும் பிரதான எதிர்க்கட்சித் தரப்பு தகவல் வெளியிட்டு இருப்பதாக அந்தச் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

இவர்களில் ஒருவர் வடக்கைச் சேர்ந்தவர். அவர் அரசாங்கத்தோடு சேர்ந்து இயங்குபவர் என்பது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் உட்பட பலரும் சுமத்தும் குற்றச்சாட்டு. அவரது கட்சியிலிருந்தும் அத்தகைய குற்றச்சாட்டு அவருக்கு எதிராக உண்டு.

அடுத்தவர் – கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். அவரது அடையாளத்தை 'மவ்ரட்ட' செய்தி நிறுவனம் வெளியிடாவிட்டாலும் அவர் இன்னொரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது.

மூன்றாவது நபர் தென்னிலங்கையை சேர்ந்தவர். தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்கு வந்தவர். ஏற்கனவே பல நிதி மோசடிக் குற்றச்சாட்டுகளுக்காக நெருக்கடிகளை எதிர் கொண்டவர்.

இந்த மூன்று பேருக்கு எதிராக நிதி தொடர்பான பல்வேறு குற்றச்சாட்டுகள், முறைப்பாடுகள் இருந்தாலும் அவர்கள் மூவரும் அரசுடன் சேர்ந்து செயல்படுகின்ற காரணத்தினால் அவர்களுக்கு எதிரான முறைப்பாடுகளும் குற்றச்சாட்டுகளும் ஆட்சி பீடத்தினால் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன என்பதுதான் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அதிருப்தியும், சீற்றமும் குற்றச்சாட்டும் என்று தெரிகிறது.

அண்மையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான விடயங்களை ஆராய ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஏற்கனவே நியமனமாகி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகையில், அதற்கு மேலாக அதே விடயத்துக்காக இன்னொரு தெரிவுக்குழுவை கொண்டு வந்து, மேலும் காலத்தை இழுத்தடித்து, மாகாண சபை தேர்தலை நடத்தாமல் கிடப்பில் போடச் செய்யும் ஒரு முயற்சியை எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் முழுமூச்சாக முன்னெடுத்தார். அது பற்றிய செய்திகள் பிரசுரமாகி இருந்தன. தெற்கில் அரசுடன் செயல்படும் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்தான் எனத் தெரிய வருகிறது.

எதிர்க்கட்சி வரிசையிலும் வடக்கிலிருந்தும் கிழக்கில் இருந்தும் தெற்கிலிருந்து திசைக்கு ஒரு புரூட்டஸ் இருப்பது மனவருத்தத்துக்குரியதுதான்....!




# நாட்டை வந்தடைந்தது எரிவாயு ஏற்றிய கப்பல்!

## 3 இலட்சம் சிலிண்டர்கள் சந்தைக்கு தட்டுப்பாட்டுக்கு முடிவு கண்ட லிட்ரோ

3 ஆயிரத்து 900 மெட்ரிக் டொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தை மேற்கோள் காட்டி அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில், இதைப் பயன்படுத்தி 3 இலட்சம் வீட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 3 ஆயிரத்து 900 மற்றும் 3 ஆயிரத்து 700 மெட்ரிக் டொன் எரிவாயுவை ஏற்றிய மேலும் இரு கப்பல்கள் முறையே எதிர்வரும் 24 மற்றும் 28ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையவுள்ளன.

எவ்வாறாயினும், நேற்று நாட்டின் பல பகுதிகளில் எரிவாயுத் தட்டுப்பாடு நிலவியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பாகங்களில் லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், சில இடங்களில் எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

மேலும் போதுமான கையிருப்பைப் பேணுவதற்காக புதிய கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், பெப்ரவரி மாத இறுதிக்குள் மூன்று எரிவாயு கப்பல்கள் வரவுள்ளன எனவும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

# பரீட்சை நிலையத்தில் மோதல்! காயமடைந்த 5 மாணவர்கள்!!

## வைத்தியசாலையில் இருந்து வந்து பரீட்சை எழுதினர்

வலப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்பல்கமுவ மற்றும் பன்னல பிரதேச பாடசாலைகளைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் 5 மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அழகியல் பாடத்துக்கான செய்முறைப் பரீட்சையின் இடைவேளையின் போது இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து அறிந்த வலப்பனை பொலிஸார், உடனடியாக பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் மற்றும் பரீட்சைகள் ஆணையாளருடன் கலந்துரையாடினர். காயமடைந்த 5 மாணவர்களும் தங்களது எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையில் பரீட்சையைத் தவறவிடக் கூடாது என்பதற்காக, அவர்கள் அழகியல்



பாடத்தின் இரண்டாம் பகுதி வினாத் தாளுக்குத் தோற்றுவதற்குத் தேவையான விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளைப் பொலிஸார் முன்னெடுத்தனர்.

மாணவர்கள் பரீட்சையை எழுதி முடித்த பின்னர், பொலிஸாரால் அவர்கள் மீண்டும் மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய கும்பல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவரின் தந்தை, மோதலைத் தூண்டிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோதலில் ஈடுபட்ட மாணவர்கள் தற்போது முக்கியமான அரச பொதுத் தேர்வுக்குத் தோற்றி வருவதால், அவர்களின் கல்வி நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு தற்போதைக்கு அவர்கள் கைது செய்யப்படவில்லை. எனினும், அவர்கள் தொடர்பான விரிவான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்து, பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வலப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பழைய சட்டங்களை நீக்காது மறுசீரமைக்க நடவடிக்கை!

## அமைச்சர் சந்தன அபேரத்ன தகவல்

"இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பில் உள்ள பழமைவாய்ந்த சட்டங்கள் அனைத்தையும் இரத்துச் செய்யாமல், அவற்றின் தனித்துவத்தைப் பேணி தற்போதைய டிஜிட்டல் யுகத்திற்குப் பொருந்தும் வகையில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

அரசு சேவையை வினைத்திறனாக்கவும், வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் "சட்ட மறுசீரமைப்பு" ஆரம்ப நிகழ்வு அமைச்சரின் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் உரையாற்றுகையில், "ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவையில் இந்தச் சட்ட மறுசீரமைப்பு தொடர்பாக ஏற்கனவே இரண்டு முறை அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. எமது நாட்டின் பெரும்பாலான சட்டங்கள் பிரித்தானிய காலத்துச் சட்டங்களாகும். அவற்றில் பல குறைபாடுகள் இருந்தாலும், அனைத்தையும் தூக்கியெறிய முடியாது. அவற்றின் சிறந்த அம்சங்களை உள்வாங்கி, தற்கால நடைமுறைக்கு ஏற்ப மாற்றியமைப்பதே எமது இலக்கு.

2024 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றமானது, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அனைவரும் இணைந்து நாடு புதிய திசையில் செல்ல வேண்டும் என்பதற்காக எடுத்த முடிவாகும். பொருளாதார மேம்பாடு மற்றும் இன நல்லிணக்கம் ஆகியவற்றின் ஊடாகவே சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதற்காகவே நடைமுறைக்குச் சாத்தியமான புதிய சட்டங்களை இயற்றவும், உள்ள சட்டங்களைச் சீர்திருத்தவும் நாம் முன்னுரிமை அளித்துள்ளோம்." – என்றார்.

இந்த மறுசீரமைப்பின் மூலம் அரச சேவையாளர்கள் பொதுமக்கள் மத்தியில் பொறுப்புக்கூற வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்றும், இதன் மூலம் வெளிப்படைத்தன்மை கொண்ட ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உருவாகும் என்றும் அமைச்சர் மேலும் நம்பிக்கை வெளியிட்டார்.

# மகளிர் தினத்தில் வீர வனிதையர் விருது விழா!

46ஆவது ஆண்டில் கால் பதித்துள்ள புதிய அலை கலை வட்டம் அதன் மகளிர் அணியை கடந்த ஆண்டு உருவாக்கியது. இந்த அணியினர் கடந்த ஆண்டில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வீர வனிதையர் விருது நிகழ்வை அறிமுகம் செய்தனர்.

இதன் இரண்டாம் கட்ட விழா இம்முறை மலரும் மகளிர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 7 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் கொழும்பு - 11 செட்டியார் தெருவில் அமைந்துள்ள கல்யாண முருகன் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

கடந்த ஆண்டு நடை பெற்ற மகளிர் தின விழாவில் வழங்கப்பட்டது போல் இவ்வாண்டும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணங்களும், துப்புரவுத் தொழிலாளருக்கு சாரி மற்றும் அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வின் பிரதான அம்சமாக கலை, இலக்கியம், ஊடகம், சமூக மற்றும் ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு வரும் பெண்கள் 20 பேருக்கு வீர வனிதை விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

பல்வேறு கலைக் கதம்ப நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று மகளிர் அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.







# புதிய அலை கலை வட்டத்தின் நல உதயம் பிரிவு மீளுருவாக்கம்

புதிய அலை கலை வட்டத்தின் சமூக நலக் குரலான நல உதயம் அமைப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை மீளுருவாக்கம் செய்யப்பட்டது.

நிறுவுநர் ராதாமேத்தாவின் தலைமையில் நடைபெற்ற ஆரம்பக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

* தலைவி – திருமதி. எம்.ஜெயனி கவிதா
* உப தலைவிகள் – திருமதி.மா.சாந்தி, திருமதி.செ.புனிதமலர்
* செயலாளர் – திருமதி. எஸ். தனலக்ஷ்மி
* உப செயலாளர் – திருமதி. ரா. புஸ்பலதா
* பொருளாளர் – ஞா.சுபப்பிரியன்

இதன்போது கமிட்டி உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நாமலுக்கு லண்டனில்...

“நாமல் ராஜபக்ஷ லண்டன் செல்வதற்கு இந்த அரசு எந்தத் தடையையும் விதிக்கவில்லை. ஆனால், அவர் அங்கு செல்லும் போது மக்கள் ஏன் கறுப்புக்கொடி காட்டுகின்றார்கள், ஏன் அவரது உரையை இரத்துச் செய்யச் சொல்கின்றார்கள் என்பதை அவர்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த காலங்களில் அவர்கள் செய்த தவறுகளின் விளைவைத்தான் இன்று சர்வதேச ரீதியாக அறுவடை செய்கின்றார்கள். அதற்கும் எமது அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

தமது தோல்விகளுக்கும், சர்வதேச ரீதியாகத் தமக்கு ஏற்படும் அவமானங்களுக்கும் தேசிய மக்கள் சக்தி அரசின் மீது பழிபோடுவது ராஜபக்ஷக்களின் வழக்கமான பாணியாகிவிட்டது. லண்டனில் இருப்பவர்கள் தன்னிச்சையாகப் போராடுகின்றார்களே தவிர, நாங்கள் யாரையும் தூண்டிவிடவில்லை. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமக்கு செல்வாக்கு இல்லை என்பதை ராஜபக்ஷ தரப்பினர் இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டும்.

அவர் லண்டனில் உரை நிகழ்த்துகின்றாரா, இல்லையா என்பது எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. அவர் மீதுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் முறைகேடுகள் குறித்த விசாரணைகள் இங்கு சட்டப்படி தொடரும். வெளிநாடுகளில் தப்பித்து ஓடி ஒளிந்தாலும், மக்கள் பணத்தைச் சூறையாடியவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது.” – என்று அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் காரசாரமாகத் தெரிவித்தார்.

### கடும் எதிர்ப்புகளுக்கு...

**கேம்பிரிட்ஜ் உரை இரத்து**

முன்னதாக, பிரித்தானியாவின் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் யூனியனில் நாமல் ராஜபக்ஷ நிகழ்த்தவிருந்த விசேட உரை, பாதுகாப்பு காரணங்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் தொடர் போராட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக இரத்துச் செய்யப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கேம்பிரிட்ஜ் யூனியன், “தற்போதைய சூழலில் இருதரப்பு சமநிலையான விவாதத்தை முன்னெடுப்பது சாத்தியமில்லை” எனத் தெரிவித்திருந்தது.

**ஒக்ஸ்போர்ட் உரை நடைபெறுமா?**

கேம்பிரிட்ஜ் நிகழ்வு இரத்தான போதிலும், திட்டமிட்டபடி ஒக்ஸ்போர்ட் யூனியனில் அவர் ஆற்றவிருக்கும் உரையும், லண்டனில் வசிக்கும் இலங்கைச் சமூகத்துடனான சந்திப்புகளும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், ஒக்ஸ்போர்ட் யூனியன் முன்பாகவும் போராட்டங்களை முன்னெடுக்கத் தமிழ் அமைப்புகள் திட்டமிட்டுள்ளதால் அங்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

**கட்சியின் முக்கியஸ்தர்கள் பங்கேற்பு**

நாமலினுடைய இந்தப் பயணத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மற்றும் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர் மிலிந்த ராஜபக்ஷ ஆகியோரும் இணைந்து கொண்டுள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இன்னொரு அறகலய?

நாட்டில் பரவலாக எரிவாயுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக பிராந்தியங்களில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

2022 இல் அறகலய போராட்டத்திற்கு வழி கோலிய கியூ (வரிசை) நெருக்கடியை நினைவுபடுத்தும் விதத்தில் இந்தத் தட்டுப்பாடு இப்போது பல இடங்களிலும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

மற்றைய பொருள்களுக்கான கியூக்களுடன் (வரிசைகளுடன்) ஒப்பிடுகையில் எரிவாயுப் பிரச்சினை வித்தியாசமானது. வெற்று எரிவாயுச் சிலிண்டருடன் வரிசையில் காத்து நிற்பதும், அதற்காக அந்த சிலிண்டருடன் இழுபறிப்படுவதும் இயல்பாகவே மக்கள் மனதில் கோபத்தையும், விரக்தியையும், அதிருப்தியையும் சினத்தையும் ஏற்படுத்தும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

லிட்ரோவிடம் போதுமான எரிவாயுக் கையிருப்பு இருப்பதாக அரசாங்கம் கதை விடுகிறது. அப்படியானால் விநியோகத்தை அதிகரித்து, எரிவாயுப் பற்றாக்குறையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர அரசு ஏன் உத்தரவிடவில்லை என்று சிறிமான் பொதுஜனம் கேள்வி எழுப்புகிறார்.

இதற்கிடையில் எரிவாயு வழங்குவதற்கான ஒப்பந்தத்தை அரசாங்கம் புதிய நிறுவனத்துக்கு வழங்கியதால் எரிவாயுப் பற்றாக்குறை ஏற்பட்டதாக எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

கடந்த ஆண்டு டிசம்பரில் நாடாளுமன்றத்தில் இந்த விடயம் குறித்து எதிரணி எம்.பியான சாமர சம்பத் தஸநாயக்க முன்னெச்சரிக்கை விடுத்திருந்தார். நம்பகமான விநியோகத்தை உறுதி செய்ய முடியாத ஒரு புதிய எரிவாயு விநியோகஸ்தருடன் அரசாங்கம் ஒப்பந்தம் செய்துள்ளதால் பெப்ரவரியில் எரிவாயுத் தட்டுப்பாடு வரும் என்று அவர் கடந்த டிசம்பரில் எச்சரித்திருந்தார். அதுவே இப்போது நடந்திருக்கின்றது.

இலங்கை ஏற்றுமதிகள் மீதான அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வரிகளைக் குறைக்கும் நோக்குடன் அமெரிக்கா விதித்த நிபந்தனைக்கு இணங்க, இலங்கை அரசாங்கம் எரிவாயு விநியோகத்தரை மாற்ற வேண்டி இருந்தது, அதனால்தான் இந்தச் சிக்கல் என்கிறார் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

இந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து எல்லாம் அரசு தரப்பில் இருந்து தகுந்த விளக்கங்கள் வரவில்லை. பதிலளிக்காமல் அமைதி பேணும் தந்திரத்தை அரசாங்கம் கைக்கொள்வதாகத் தெரிகிறது. இவற்றுக்கு அரசாங்கம் சரியான விளக்கம் அளிக்க வேண்டும்.

புதிய விநியோகஸ்தரினால் மக்களின் தேவைக்கு அவசியமான எரிவாயுவை விநியோகிக்க முடியாது போகுமானால், இந்த விவகாரம் அடுத்து வரும் வாரங்களில் பெரும் சிக்கலாக முனைப்பு அடையும்.

அதற்கு முன்னர் இந்தப் பிரச்சினைக்கு அரசு ஒரு தீர்வைக் கண்டுவிட வேண்டும்.

எரிவாயு உட்பட மக்களின் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை வசமாகப் பயன்படுத்தித்தான் அறகலய போராட்டத்தை உச்சமடைய வைத்து, அதன்மூலம் தான் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றுவதற்கான கள நிலைமையை ஏற்படுத்தியது இன்றைய ஆட்சிப் பீடத்தில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி.

வரிசை யுகத்தை ஏற்படுத்தும் போக்குக்கு இடம் அளித்தால் கோட்டாபய அரசுக்கு நேர்ந்த கதி இப்போதைய அரசுக்கும் நேர்வதற்கு காலம் செல்லாது என்ற உண்மையை தேசிய மக்கள் சக்தி உணர்ந்திருக்கும் என்று நம்பலாம்.

அடுத்து வரும் நாள்களுக்குள் எரிவாயுத்தட்டுப்பாட்டை அடியோடு நீக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்காவிட்டால் இன்னொரு அறகலயவுக்கு அது வெற்றிலை வைக்கின்றது என்பது தான் அர்த்தம்.

# முன்னாள் போராளிகள் அனைவரும் அரசியல் மயப்படுத்தப்பட வேண்டும்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் அழைப்பு



(பூ.லின்ரன்)

2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனித்த பின் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் தொடர் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் போராளிகள் இன்னும் முழுமையாக அரசியல் மயப்படவில்லை என்பதே. அதனால் முன்னாள் போராளிகள் அரசியல் மயப்பட வேண்டும் என ஜனநாயகப் போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் அழைப்பு விடுவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேராளர் மாநாட்டில் ஜனநாயக போராளிகள் கட்சி தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவருமான வேந்தன் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து இயக்கங்களும் அரசியல் மயப்படுத்தப்பட்ட பின்னரே அவர்களுக்கான அடக்குமுறைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சுனைகள் ஓரளவு முடிவுக்கு வந்துள்ளது.

அதே போல் 12, 000 இற்கு மேற்பட்ட புனர்வாழ்வு பெற்ற போராளிகள் வடக்கு, கிழக்கு முழுவதும் காணப்படுகின்றனர். ஆனாலும் அவர்கள் இன்னும் பல அரசியல் அடக்கு முறைகள் மற்றும் புலனாய்வுத் துறையினரின் பின் தொடரும் நெருக்கடிகளைத் தொடர்ந்து கொண்டுள்ளனர்.தனை நிறைவுக்கு கொண்டு வர அனைவரும் ஒன்றிணைந்து தமக்கான ஓர் அரசியல் பிரதிநிதித்துவத்தை உருவாக்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தை முழுமையாக தந்துள்ளது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியே ஆகும்.

பல கட்சிகளில், பல முன்னாள் போராளிகள் இருந்தாலும் அவர்கள் இன்னொருவருக்கான அரசியல் அங்கீகாரத்திற்காக செயற்பட்டு வருகின்றனர். இந்த நிகழ் காலத்தில் ஆயுதம் ஏந்தி போராடிய விடுதலைப் புலிகளின் ஒரே தெரிவாக ஜனநாயக போராளிகள் கட்சி உள்ளது.

அதனால் அனைத்து புனர்வாழ்வு பெற்ற போராளிகளும் ஓரணியில் திரண்டு தமக்கான பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். – என ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் ‘பார் லைசென்ஸ்’ எதுவும் பெறவேயில்லை!

## அடித்துக் கூறுகின்றார் ரெலோ தலைவர் செல்வம்




இந்த 4 கோடி ரூபாவுக்கான எந்த பார் லைசன்ஸும் நாங்கள் எடுக்கவில்லை. இது தான் போராளிகளின் ஜனநாயக தேசிய கூட்டமைப்பு.

– இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் நேற்றைய பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

துப்பாக்கி சத்தம் இல்லாத தேசத்தில் இப்போது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். முன்னர் துப்பாக்கிச் சத்தங்களோடுதான் வாழ்ந்து கொண்டிருந்தனர். ஆனால் இன்றைக்கு துப்பாக்கி சத்தம் இல்லாத போருக்குள் இருக்கின்றமையை எங்களது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

துப்பாக்கி சத்தம் இல்லாத போராட்டம் என்று எதற்கு சொன்னேன் என்றால் இன்றைக்கு கடல் வளம் – நிலம் பறிப்பு, பௌத்த மயமாக்கல், ஆக்கிரமிப்பு, அடையாளங்களை சிதைக்கும் நடவடிக்கைகள் திட்டமிட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆட்சிக்கு வர முன்னர் அநுர அரசாங்கம் ஊழலை, போதையை, பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிப்போம் என்றும் தமிழ் மக்களுடைய இனப் பிரச்னைக்கு தீர்வை வழங்குவோம் எனச் சொல்லித்தான் புதிதாக ஆட்சிக்கு வந்தார்கள்.

அவ்வாறு இவர்கள் ஆட்சிக்கு வந்த காலத்தில் பார் லைசன்ஸ் தொடர்பில் பெரிதும் பேசபட்டது. அதில் தமிழ் எம். பிக்கள் குறித்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போது எமது மக்களும் ஆதங்கங்கப்பட்டு குழம்பி போயிருந்தனர். ஆனால் இந்த 4 கோடி ரூபாவுக்கான எந்த பார் லைசன்ஸும் நாங்கள் எடுக்கவில்லை. இது தான் போராளிகளின் ஜனநாயக தேசிய கூட்டமைப்பு. ஆனால் அன்றைக்கு ஆதங்கப்பட்ட மக்கள் கூட இதை உணர்ந்து கொள்ளவில்லை. ஆகவே மக்கள் தான் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

மேலும் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வர் முன்னரும் சரி, ஆட்சிக்கு வந்த பின்னரும் சரி வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. தொடர்ந்தும் பொய் வார்த்தைகளை கூறி மக்களை ஏமாற்றிக் கொண்டே வருகிறது.

அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத அதே நேரத்தில் தொடர்ந்தும் தொடர்ந்தும் எமது மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகிற அடக்குமுறைகள், ஆக்கிரமிப்புக்கள் குறித்து நாங்கள் எடுத்துக் கூறுகிறபோது கூட அந்தப் பிரச்சினையை தீர்த்து வைப்பதாகக் கூறுவார்கள்.

ஆனால் நீங்கள் கூறுகிற எதுவும் நடப்பதாக தெரியவில்லை.

ஆக இந்த அரசாங்கம் என்பது வெறும் வாய்ப் பேச்சளவில்தான் இருக்கிறது. இந்த ஜனாதிபதி நேர்மையானவர், உத்தமர் என்ற நம்பிக்கையில் தான் வடகிழக்கு மட்டுமல்ல, முழு இலங்கையிலும் மக்கள் அவருக்கு வாக்களித்தனர். அது இன்றைக்கு பொய்யாகிக் கொண்டு இருக்கிறதென்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போல தான் தமிழ் மக்கள் விடயத்தில் தமிழ் மக்களுக்கு எதிராகவே இந்த அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டு வருகிறது.

அதிலும் நிலம், வளம் பறிபோகிறது. இப்போது பிரஜா சக்தி என்ற ஒன்றும் வந்துள்ளது. இதே போல நிழல் மாகாண சபையும் வந்துள்ளது. இவ்வாறு சட்டத்திற்கும் ஜனநாயகத்திற்கும் புறம்பான செயற்பாடுகளை இந்த அரசாங்கம் முன்னெடுக்கிறது.

உண்மையில் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் என்னவெல்லாம் சொன்னார்களோ அவை எதனையும் செய்யவில்லலை. குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டம் கூட நீக்கப்படுமென்றவர்கள். இப்போது அதை நீக்கவும் இல்லை.மாறாக புதிய சட்டத்தை கொண்டு வரவே முயற்சிக்கின்றனர்.

மேலும் இயற்கை அனர்த்தத்திற்கு முழுமையான இழப்பீடு தருவதாகச் சொன்னவர்கள். அதையும் செய்யவில்லை. சொன்னதை செய்யமால் பேச்சளவில் எல்லாமே கானல் நீராகவே இருக்கின்றன.

இந்த அரசாங்கம் இப்போது எதைப் பார்க்கிறீர்கள் என்றால், வடக்கு – கிழக்கிலே தங்களுக்கும் அங்கத்தவர்கள் இருக்கிறார்கள் என்றும், ஆகையினால் தமிழ்த் தரப்புகள் சொல்கிறதை செய்யாமல் தாம் விரும்பியதை செய்யலாம் எனக் கருதுகின்றனர். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இவர்கள் சொன்னதையோ சொல்வதையோ ஒருபோதும் செய்ததில்லை என்பதை நாங்கள் வெளிப்படுத்த வேண்டும். அதனூடாக அரசின் பொய்ப் பிரச்சாரத்தை முறியடிக்க வேண்டும்.

அவ்வாறு இவர்களின் பொய்ப் பித்தலாட்டங்களை முறியடிக்க வேண்டுமென்றால் மக்களுடைய பிரச்சினைகளுக்கு பாரியளவில் மக்களைத் திரட்டித் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதனை வெகு விரைவில் பகிரங்கமாக அறிவித்து செயற்படுத்த வேண்டியது அவசியம்.

அதனை நாங்கள் விரைவில் செய்வோம். இதற்கான அறைகூவலை வெகு விரைவில் நாங்கள் விடுப்போம். அதனூடாக ஏமாற்று வித்தை காட்டும் அநுர அரசாங்கத்தை அம்பலப்படுத்த வேண்டும். – என்றார்.

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி பேராளர் மகாநாட்டின் தீர்மானங்கள்




ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் முதலாவது பேராளர் மாநாடு சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத்தில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணைத்தலைவர்களால் மக்கள் விளக்கு ஏற்றி மாநாடு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பேராளர் மாநாட்டில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இனைத்தலைவர்கள், கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கி யஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

# அரசாங்கம் கொண்டுவர விரும்பும் புதிய அரசியல் சாசனமானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் தமிழ் மக்கள் தமது பூர்வீக வாழ்விடப் பிரதேசத்தில் ஒரு சுயாட்சியை ஏற் படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் சமஷ்டி அரசியல் அமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டுமென இலங்கை அரசாங்கத்தை இம் மகாநாடு வலியுறுத்துகிறது.

# முன்னாள் ஜனாதிபதிகளான ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க, மஹிந்த ராஜபக்ஷ போன்றோர் நடைமுறையில் உள்ள பதின்மூன்றாவது திருத்தத்திற்கு அப்பால் சென்று அரசியல் தீர்வைக் காண்போம் என கூறியிருந்தனர். அதற்காக பல்வேறுபட்ட தெரிவுக்குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் தீர்வுகள் எட்டப்படவில்லை. எனவே தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டத்தின் நியாயத்தினைப் புரிந்து, தமிழ் மக்கள் விரும்புகின்ற, எதிர்பார்க்கின்ற சமஷ்டி முறையை ஏற்படுத்த வேண்டுமெனவும் இலங்கை அரசை இம் மகாநாடு வலியுறுத்துகிறது.

# இலங்கையில் தற்போது நடை முறையில் உள்ள மாகாணசபை முறையின் கீழ் நடாத்தப்பட வேண்டிய மாகாணசபைத் தேர்தல்கள் கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக நடாத் தப்படவில்லை. மக்களால் தெரிவு

செய்யப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளு னராலேயே மாகாண நிர்வாகங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகங்கள் ஆளுங்கட்சி சார் நிர் வாகங்களாக மாற்றப்படுகின்றன. அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த வேண்டுமென்றும் மிக விரைவாக முன்னைய

விகிதாசார முறைப்படி தேர்தல்களை நடாத்தி மாகாண நிர்வாகங்களை மக்களின் பிரதிநிதிகளிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இலங்கை அரசை இம் மகாநாடு வலி யுறுத்துகிறது.

# நாற்பத்தாறு வருடங்களுக்கு முன்பாக தற்காலிக ஏற்பாடாக நடை முறைக்கு வந்த பயங்கரவாத தடைச் சட்டம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கவே கொண்டு வரப்பட்டது. இச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆயிரக் கணக்கான இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டு சித்திர வதைகளுக்குள்ளாக்கப்பட்டதுடன் பல நூறு பேர் கொல்லப்பட்டுமுள்ளனர். ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடமே இச் சட்டம் நீக்கப்படுமென தற்போதைய ஜனாதிபதி இலங்கை மக்களுக்கு உறுதி

வழங்கியிருந்தார். ஆனாலும், தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலாக அதைவிட மோசமான, அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எனும் ஒன்றைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து மனித உரிமை அமைப்புகளும் கண்டிக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனவும், அதற்குப் பிரதியீடாக எவ்வித சட்டமும் இந் நாட்டுக்கு தேவையில்லை எனவும் இலங்கை அரசை இம் மகாநாடு வலியுறுத்துகிறது.

# இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் - இங்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப் புக்கூடாக முழுமையாகவும் முறை யாகவும் விசாரிக்கப்பட்டு பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகளின் மீள்நிகழாமையை உறுதி செய்ய வேண்டும் என அர சாங்கத்தை இம் மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

# யுத்தம் முடிவடைந்து பதினாறு ஆண்டுகள் நிறைவடைந்தநிலையிலும், மீண்டும் ஒரு யுத்தம் எனும் அச்சுறுத்தல் அறவே இல்லாத சூழலிலும் கூட சிறை களில் மிக நீண்டகாலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்பதுடன் மாறாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பிற்காக வும் தமது நோக்கங்களை அடைவதற் காகவும் தவிர்க்க முடியாத சூழலில் முன்பு ஆயுதம் ஏந்தினோம் எனக் கூறும் ஒருவரை செயலாளராக கொண்டுள்ள கட்சி சார்ந்த தற்போதைய ஆட்சித் தலைவர் தமிழ் இளைஞர்களின் நிலையினைப் புரிந்துகொண்டு அவர்கள் தமது எஞ்சிய காலத்தினையாவது அமைதியும் சமாதானமும் நிறைந்த சூழலில் வாழ நடவடிக்கை எடுக்க வேண்டுமென இம் மகாநாடு கோரி நிற்கிறது.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோருக்கான போராட்டம் பல ஆண்டு களாகத் தொடர்ந்து நடந்து வருகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை. வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவுகளுக்கான நீதிவழங்கப்பட வேண்டுமென அரசாங்கத்தை இம் மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

# இந்திய இழுவை மடிப் படகுகளாலும், உள்ளூர் இழுவை மடித் தொழிலாலும், சட்டவிரோதமான மீன்பிடி முறைகளாலும், மீனவக் கிராமங்களில் படைத்தரப்புகள் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புகளாலும் கடல் மீதான உரிமையை இழந்தும், கடல் வளங்களை இழந்தும், தமது வாழ்வாதாரங்களை இழந்தும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் 46.000 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். எமது நாட்டின் கடல் வளங்கள் அழிக்கப்படுவதை தடுப்பதற்கும், கடற்றொழிலாளர்கள் சமூகத்தின்வாழ்க்கையை மேம்படுத்து வதற்குமான வகையில்,2016 ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய அரசு கள் மேற்கொண்ட கூட்டு இணக்கத் தின் அடிப்படையில் மீண்டும் பேச்சுக் களைஆரம்பிக்கவும், 1996ம் ஆண்டின் 02 ஆம் இலக்க மற்றும் 2017ம் ஆண்டின். 11ஆம் இலக்கச் சட்டங்களை உறுதியான முறையில் நடைமுறைப்படுத்தவும். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலுவாக்கி, மீனவக் கிராமங்களிலிருந்து படைத்தரப்பினரை வெளியேற்றி அம் மக்களின் பாதுகாப்பும் வாழ்வா தாரங்களும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அரசாங்கத்தை இம் மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

# விவசாயத்தை வாழ்வாதாரமாக

தொடர்ச்சி ▼

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி பேராளர் மகாநாட்டின் தீர்மானங்கள்

தொடர்ச்சி ▲

நம்பியுள்ள பெருமளவு மக்களின் நலன்களை பேண உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தே தற்போதைய அரசாங்கம் ஆட்சியை அமைக்க

விவசாயிகளின் ஆதரவை பெற்றுக் கொண்டது. இன்று நெல்லை அறுவடை செய்த விவசாயிகள் சீரற்ற வானிலை காரணமாக நெல்லைக் காயவைக்க முடியாமல் நிற்கிறார்கள். காய வைத்தாலும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு நெல்லை விற்க முடியவில்லை. அரசாங்கமோ நெல்லைக் கொள்வனவு

செய்து விவசாயிகளுக்கு உதவிட போதுமான நிதியை ஒதுக்காமல் உள்ளது. இம்முறை ஏறக்குறைய எட்டு இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் முப்பது இலட்சம் மெற்றிக் தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்படுவதால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் முழு நெல்லையும் கொள்வனவு செய்ய அரசாங்கம் முழுமையான நிதியை உரிய நிறுவனங்களுக்கு விடுவிக்க வேண்டுமென இம் மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

# வடக்கு மாகாணத்திற்கு மகாவலி நதி நீர் வரக்கூடியளவிற்கு நீரும் இல்லை, வாய்ப்புகளும் இல்லை என்பதை மகாவலி அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்கள் "மங்கள முனசிங்கவின் தெரிவுக்குழுவில்" பல வருடங்களுக்கு முன்பாகவே தெளிவாக எடுத்துக் கூறியிருந்தனர்.

இதன் அடிப்படையில், மகாவலி எல் வலயம் என்பது சிங்கள மக்களைக் குடியேற்றும் திட்டமே தவிர விவசாய விரிவாக்கத் திட்டமல்ல. மகாவலி எல் வலயத்திற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள மணலாறுப் பிரதேச நிலங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டே அங்கு சிங்கள மக்கள் படையினரின் பாதுகாப்புடன் குடியேற்றப்பட்டு அப் பிரதேசம் வெலிஓயா எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இதேபோன்றே வவுனியா வடக்குப் பிரதேசத்திலும் பழந் தமிழ்க் கிராமங்கள் சிங்களக் குடியேற்றங்களாக்கப்படுகின்றன. வவுனியா வடக்குப் பிரதேசத்தில் சிங்கள ஊர்கள் குடிப்பரம்பலை மாற்றும் நோக்குடன் மாவட்டத்திற்கு தன்னிச்சையாக அரச நிர்வாகத்தால் வெளியே இருக்கும்

இணைக்கப்படுகின்றன. இவ்வாறான சிங்களக் குடியேற்றங்களின் நீர்த் தேவையெனக் கூறி, தமிழ் மக்களின் கிராமங்களையும், வயல் நிலங்களையும் மூழ்கடிக்கக்கூடிய "கிவுல் ஓயா" திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டுமென இலங்கை அரசை இம் மகாநாடு வலியுறுத்துகிறது.

அத்திட்டத்திற்குப் பதிலாக, அப் பிரதேசத்தில் உள்ள சிறு குளங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக விவசாயத்திற்கு தேவையான நீரைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் இம் மகாநாடு சுட்டிக் காட்டுகிறது.

# ஜனாதிபதி அவர்கள் பதவிக்கு வந்ததும், பாதுகாப்பு தரப்பினரால் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படுமென உறுதிமொழியை வழங்கப்பட்டிருந்தது. ஆனாலும்

பதினாறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் காணிகள் விடுவிக்கப்பட வில்லை. யுத்தம் முடிந்து பதினாறு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் காணிகள் விடுவிக்கப்படாமல், இராணுவக் கட்டுமாணங்கள் தொடர்ந்து பேணப்படுவதுடன், மக்களுக்குரிய நிலங்களில் புதிய கட்டுமாணங்களும் உருவாக்கப் படுகின்றன. தமிழ் மக்கள் மீதான பாரபட்சத்தையே இது காட்டுகிறது. எனவே வெற்று வாக்குறுதிகளை தொடர்ந்து வழங்குவதை விட்டு உடனடியாகவே மக்களின் வதிவிடங்களை விடுவிக்குமாறு இலங்கை அரசை இம் மகாநாடு வலியுறுத்துகிறது.

# தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு மற்றும் கிழக்கில் மகாவலி அபிவிருத்திச் சபை மட்டுமன்றி, தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணக்களம் மற்றும் கனிய மணல் திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் மூலமாகவும் ஏராளமான தமிழர் பயன்பாட்டு நிலங்கள் பறித்தெடுக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட மக்களின் அனுமதியின்றியும், பிராந்திய திணைக்கள அதிகாரிகளின் தொடர்புகளின்றியும் மத்திய அரசின் அதிகாரிகளினாலும்,படையினராலும், பௌத்த பிக்குகளினாலும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் புராதன பௌத்த இடங்கள் என்ற பெயரில் தமிழ் மக்களின் வாழ்விடங்கள் அபகரிக்கப்பட்டும் அவர்களது விவசாய நிலங்கள் அவர்களிடம் இருந்து பிடுங்கபட்டும் அவ்விடங்களில் புத்த கோயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. புராதன இடங்களாக இருந்தால் அது பாதுகாக்கப்பட வேண்டுமே தவிர, சட்டவிரோதமான முறையில் புத்த கோயில்களை கட்டமுடியாது. அவ்வாறான கட்டுமாணங்கள் அனைத்தையும் இடைநிறுத்தி அவை தொடர்பாக ஆக்கபூர்வமான

விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இம் மகாநாடு அரசைக் கோருகின்றது.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு எல்லையில் சிங்கள பௌத்தமயமாக்கலும் நிலப்பறிப்பும் தொடர்கிறது. 3000 ற்கும் அதிகமான குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான கால்நடை சார்ந்த பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தோடு மயிலத்தமடு, மாதவனை போன்ற இடங்களில் உள்ள மேய்ச்சல் தரைகளை அரச அனுசரணையோடும், பாதுகாப்போடும் வெளி மாவட்ட சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள். இவ் விடயத்தில் நீதிமன்றத் தீர்ப்புகளும் மீறப்படுகின்றன. வாகரை பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தையும் சுற்றுச் சூழல் பாதுகாப்பினையும் பாதிக்கும்கனிமவள அகழ்வுகளும் சட்ட விரோத இறால் பண்ணைகளும் மக்களின் எதிர்ப்பை மீறியே முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றிப்புள்ளி வைத்து அம் மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்குமாறு அரசாங்கத்தை இம் மகாநாடு வலியுறுத்துகிறது.

# அம்பாறை மாவட்டத்தில், கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை முழுமையான ஒரு பிரதேச செயலர் பிரிவாகத் தரம் உயர்த்துமாறு அங்குள்ள தமிழ்மக்கள் நான்கு தசாப்தங்களாக தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இன்றுவரை ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. மாறாக அங்குள்ள சிறுபான்மையின மக்களை மாறி மாறி ஏமாற்றி இனப் பகைமையினை மேலும் மேலும் வளர்க்கும் கைங்கரியத்தையே செய்து வந்துள்ளன.

அனைவரும் இலங்கையர் என்பதே ஆட்சியின் அடிப்படை என உரத்துக் கூறும் அரசாங்கம் கல்முனையில் தமிழர்களுக்கு தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் அநீதியை இல்லாது செய்ய உடன் நடவடிக்கை எடுக்க இம் மகாநாடு வலியுறுத்துகிறது.

# "பிரஜா சக்தி" எனும் திட்டத்தின் கீழ் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் கட்சி உறுப்பினர் ஒருவரை முழு அதிகாரத்துடன் அரசாங்கம் நியமித்து வருகின்றது. கிராமத்தின் புள்ளி விபரங்கள், அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு போன்ற விடயங்களைக் கவனிக்கவென ஏற்கனவே மூன்று அரச நிர்வாக அதிகாரிகள் ஒவ்வொரு கிராமப் பிரிவிலும் பணியாற்றுகின்ற நிலையிலும், அனைத்துக் கிராமங்களிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இயங்கிக் கொண்டிருக்கின்ற நிலையிலும் இவர்கள் அனைவரையும் ஓரம்கட்டி, கட்சி உறுப்பினர் ஒருவரை முழு அதிகாரங்களை வழங்கி நியமனம் செய்வதும் அதற்கான குழு ஒன்றை அமைப்பதும் முற்றிலும் ஜனநாயக விரோத செயற்பாடாகும்.

எனவே பிரஜா சக்தி எனும் ஆளும் கட்சியின் ஜனநாயக விரோத திட்டத்தை கைவிடுமாறு இலங்கை அரசை இம் மகாநாடு வலியுறுத்துகிறது.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நிர்வாக ரீதியாகவோ அரசமைப்பு ரீதியாகவோ நேரடிச் சம்பந்தமில்லாத மாகாணசபை நிர்வாகத்திற்குள், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை

உள்வாங்கி கல்வி, சுகாதாரம், விவசாயம், உள்ளூராட்சி ஆகிய துறைகளில் பொறுப்புகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் அண்மையில் சட்ட விரோதமாக மேற்கொண்டுள்ளார். மாகாணசபை நிர்வாகத்தை சிறுமைப்படுத்தும் இந் நடவடிக்கையை ஆளுநர் அவர்கள் உடனடியாக கைவிடவேண்டுமென இம் மகாநாடு வலியுறுத்துகிறது. - என்று உள்ளது.







# புத்தளம் தில்லையடியில் ஓட்டோ சாரதி சடலமாக மீட்பு

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

புத்தளம் தில்லையடி, அல்–காசிம் கிராமத்திற்கு அருகில் வீதியோரத்தில் இருந்து ஓட்டோ சாரதி ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமையன்று மீட்கப்பட்டுள்ளதாக புத்தளம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.



புத்தளம் தில்லையடி பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான 72 வயதுடைய அப்துல் லத்தீப் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த ஓட்டோச் சாரதி சனிக்கிழமை இரவு வீட்டில் இருந்த போது, வாடகை சவாரி ஒன்றுக்குச் செல்கின்றாத் எனக் கூறி இனந்தெரியாத ஒருவரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அவர் காலை வரையிலும் வீடு திரும்பாத நிலையில், அவரது மருமகன் புத்தளம் தலைமையகப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில், அவரது வீட்டிலிருந்து சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ள அடப்பனாவில்லு கிராமத்திற்குச் செல்லும் வீதியின் வடிகான் ஒன்றில் சடலம் கிடப்பதைக் கண்ட ஒருவர் கிராமவாசிகளுக்கு அறிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து பொலிஸாரிடம் வழங்கிய தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வாடகை சவாரி என்று கூறி அவரை அழைத்துச் சென்ற நபரே இக்கொலையை செய்துள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீட்பதற்கு அரசு முன்வரவேண்டும்

## நாவிதன்வெளி தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் அவசர கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

இயற்கைச் சீற்றங்கள் மற்றும் காட்டு யானைகளின் தொடர் அட்டகாசத்தினால் வாழ்வாதாரத்தை இழந்து நிர்க்கதியாகியுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கம் உடனடியாக நட்டஈடு வழங்க முன்வர வேண்டுமென நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

**மழையினால் முளைக்கும் நெல்மணிகள்**

நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் விவசாயத்துறை இன்று பெரும் சிதைவைச் சந்தித்துள்ளது. அண்மையில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்குக் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கின.

பெரும் சிரமத்திற்கு மத்தியில் அறுவடை செய்யப்பட்டு, உலர்த்துவதற்காக வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள், கடந்த 10 நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் "டித்வா" புயல் மற்றும் பருவப் பெயர்ச்சிமழையினால்தற்போது முளைக்கத் தொடங்கியுள்ளன. இதனால் விவசாயிகள் பெரும் கவலையிலும் மன உளைச்சலிலும் உள்ளனர்.

**தனியார் ஆலைகளின் விலைச் சுரண்டல்**

மறுபுறம், நெல் கொள்வனவில் தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் விவசாயிகளைத் திட்டமிட்டுச் சுரண்டி வருகின்றனர். தற்போது நிலவும் இக்கட்டான சூழலைப் பயன்படுத்தி, மூன்று மூடை நெல்லை வெறும் 10 ஆயிரம் ரூபாய்க்கு மாத்திரமே தனியார் ஆலைகள் கொள்வனவு செய்கின்றன. இது விவசாயிகளுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

இந்த நஷ்டம் காரணமாக, அடுத்த சிறுபோகச் செய்கைக்குத் தேவையான மூலதனம் இல்லாமலும், விதை நெல்லைக் கொள்வனவு செய்ய முடியாமலும் விவசாயிகள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளனர்.

**அரசுக்கு விடுக்கப்படும் கோரிக்கைகள்**

விவசாயிகளின் கண்ணீரைத்துடைக்க அரசாங்கம் பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்:-

# ஈர நெல் கொள்வனவு: உலர்ந்த நெல்லைப்போன்றே, மழையினால் பாதிக்கப்பட்ட ஈர நெல்லையும் அரசாங்கம் நியாயமான விலையில் கொள்வனவு செய்ய வேண்டும்.

# நேரடி நட்டஈடு: காட்டு யானைத் தாக்குதல்கள் மற்றும் வெள்ளத்தினால் பயிர்ச் சேதமடைந்த விவசாயிகளுக்கு



உரிய நட்டஈடு விரைவாக வழங்கப்பட வேண்டும்.

# நிரந்தரத் தீர்வு: ஒவ்வொரு பிரதேசத்தின் சூழலுக்கு ஏற்ப, விவசாயப் பாதிப்புகளைத் தவிர்க்கும் வகையிலான நிரந்தரத் திட்டங்களை ஜனாதிபதியும் விவசாய அமைச்சும் இணைந்து வகுக்க வேண்டும்.

- நாட்டின் உணவு உற்பத்திக்கு முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். - என அந்த அறிக்கையில் தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் தொடரும் காட்டு யானை அட்டகாசம்









மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட மாந்தீவு பகுதிக்குள் ஏற்கனவே புகுந்திருந்த கட்டு யானைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை திருப்பந்துறை பிரதேசத்திற்குள் நுழைந்து அட்டகாசம் செய்துள்ளன.

கடந்த ஐந்து தினங்களாக தொடர்ந்து அப்பகுதியில் காட்டு யானைகள் உட்புகுந்து நெற்பயிர்கள் மற்றும் ஏனைய பயிர் வகைகளையும் துவம்சம் செய்கின்றன என அப்பகுதி பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யானைகள் - மனித மோதலுக்கு நிரந்தர தீர்வு இதுவரையில் எட்டப்படவில்லை என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகஸ்த்தர்களும், அப்பகுதி பொதுமக்களும் இணைந்து இந்தக் காட்டு யானைகளை அப்பகுதிகளிலிருந்து வெளியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு காட்டு யானைகளில் அட்டகாசத்தாலும் நடமாட்டத்தாலும், வழமையான தமது அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட முடியதுள்ளதாகவும், மிகுந்த அச்





சத்தின் மத்தியிலேயே தாம் நடமாடுகின்றனர் எனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

# நாட்டுக்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் பழசும் வேண்டாம்; புதுசும் வேண்டாம்!

## ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் நிலாந்தன் கருத்து

(பழுவூரான்)

இலங்கை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றீடான அதி பயங்கர சட்டமான பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டமும் வேண்டாம். தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடைச் சட்டமும் வேண்டாம் என சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினருமான செ.நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கு தமிழ் மக்கள் சார்பாக அரசாங்கம் கொண்டு வரவுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டத்திற்கு எதிராக மட்டக்களப்பு செங்கலடி நகரில் நடைபெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் கடந்த 1979 ஆம் ஆண்டு தமிழ்ப் போராளி குழுக்களை அடக்குவதற்காக தற்காலிக சட்டமாக கொண்டு வரப்பட்ட தற்காலிக பயங்கரவாத தடுப்பு சட்டம் இன்று வரைத் தொடர்கிறது.

1979ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக கொண்டு வரப்பட்ட இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை 1982 ஆம் ஆண்டு நிரந்தரச் சட்டமாக இலங்கை அரசாங்கம் மாற்றியது.

இந்நிலையில் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் சமூகமே மிக மோசமான அடக்கு முறைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் ஆளாகியதோடு அப்பாவி தமிழ் இளைஞர்கள் எந்தவித விசாரணைகளும் இன்றி பல வருடக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்தனர்.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு ஆரம்பத்தில் எந்த சர்வதேச அமைப்புகளோ, நாடுகளோ இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்காத நிலையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமை அமைப்புகள், ஐரோப்பிய ஒன்றியம் போன்றன பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கினர்.

மிக முக்கியமாக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வேண்டுமென்றால் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற வலியுறுத்தலை முன்வைத்திருந்தது.

இதன் அடிப்படையில்தான் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றிடாக பயங்கரவாதஎதிர்ப்புச்சட்டத்தைகொண்டு வர முயற்சி செய்தனர். அதுவும் இருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தை விட மோசமான சட்டம் என்ற அடிப்படையில் அதற்கான ஆதரவும் கிடைக்காத நிலையில் பின்னர் பயங்கரவாத விரோதச் சட்டம் என்ற ஒன்றை அரசாங்கம் முன் வைத்திருந்தது. அதுவும் நிராகரிக்கப்பட்ட நிலையில் தற்போதைய அரசாங்கம் பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டம் என்ற ஒரு சட்ட வரைவைக் கொண்டு வந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஆணையை இலங்கை மக்களிடம் கோரி நிற்கின்றது.

கடந்த காலங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பதே இலங்கைக்கு வேண்டாம், இந்த சட்டத்தை முற்றாக ஒழிக்க வேண்டும் என்று கூறிய ஜே.வி.பி. கட்சியினர் இன்று ஆட்சிக்கு வந்த பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விட மிக மோசமான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத்தயாராகிவருகின்றனர்.

எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்குள் பொது மக்கள் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு மாற்றீடாக கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்ட வரைவு வேண்டுமா? வேண்டாமா? என்ற கருத்துக்களை நீதி அமைச்சுக்கு அனுப்புமாறு கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

இருக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்திலும் மிக மோசமான - பயங்கரமான - ஜனநாயகத்திற்கும், அடிப்படை உரிமைகளுக்கும் எதிரான சட்டமாக இந்த பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்ட வரைவு உள்ள படியால் இதனை தமிழ் மக்களாகிய நாம் முற்றாகப் புறக்கணிக்கின்றோம்.

இந்த சட்டமானது தனி மனித உரிமைகளை பாதிப்பதோடு, உரிமைகளுக்காக போராடுகின்ற, குரல் கொடுக்கின்ற, செயற்படுகின்ற அமைப்புகளையும், மக்கள் கூட்டத்தையும் ஒடுக்குவதற்கும், அடக்குவதற்கும், கைது செய்வதற்கும் பயன்படுத்தப்படலாம் என்பதால் இந்த பழைய பயங்கரவாத தடைச் சட்டமும் வேண்டாம், அதற்கு பதிலாக கொண்டு வரப்படவுள்ள புதிய பயங்கரவாத சட்டமும் வேண்டாம் என்ற கோரிக்கையை அரசாங்கத்திற்கு முன் வைக்கின்றோம். - என்றார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க கோரி அம்பாறையில் நேற்று கையெழுத்து வேட்டை

(பாறுக் ஷிஹான்)

நாட்டிலிருந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும் புதிதாக கொண்டுவரப்பட இருக்கின்ற பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாத்தல் எனும் புதிய சட்ட வரைவு முயற்சியைக் கைவிடக் கோரியும் வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகம் எங்கும் கையெழுத்துச் சேகரிக்கின்ற பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்றைய தினம் அம்பாறை மாவட்டம் திருக்கோவில், தம்பிலுவில் மத்திய சந்தைக்கு முன்பாகவும் கையெழுத்து சேகரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

இக்கையெழுத்து சேகரிக்கும் பணியிக், வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், அம்பாறை மாவட்ட வழிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி, மனித உரிமை செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன், சமூக செயற்பாட்டாளர் துரையப்பா காந்தன், ரெலோவின் மாவட்டப் பொறுப்பாளர், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டோரும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்து உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்பு பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த இரண்டு சட்டங்களும் எமக்கு தேவையில்லை என்று பல பொதுமக்கள் ஆர்வத்துடன் வந்து கையெழுத்து இடுவதை இங்கு அவதானிக்க முடிந்தது.









# கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த சம்மாந்துறையில் பிரதேச சபை நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

பொதுப் போக்குவரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கட்டாக்காலி மாடுகளினால் அன்றாடம் வீதி விபத்துகள் மற்றும் பொதுச் சொத்துக்கள் நாசமாக்கப்படல், பெறுமதியான பயிர் வகைகள் சேதமாக்கப்படல் போன்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என சம்மாந்துறை பிரதேச சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கட்டாக்காலியாக அலைய விடப்பட்ட மாடுகளை அதன் சொந்தக்காரர்கள் இனி மேல் வீடுகளில் அல்லது பண்ணைகளில் கட்டி வைத்து பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சம்மாந்துறை பிரதேச சபை அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. இது அவர்களுக்கான இறுதி அறிவித்தலாகும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கட்டாக்காலியாக பிடிக்கப்படும் மாடுகளுக்கு பிரதேச சபையினால் ஒரு மாட்டுக்கு 10,000 ரூபா தண்டப்பணமும் ஒருநாள் பராமரிப்புச் செலவாக 2,000 ரூபாவும் அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று நாள்களுக்குள் தண்டப்பணத்தைச் செலுத்தி




பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் தவறும் பட்சத்தில் இம்மாடுகள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு அரச உடமையாக்கி ஏலத்தில் விற்கப்படும் என சம்மாந்துறை பிரதேச சபை அறிவித்துள்ளது.

மேலும் இந்நாள்களுக்குள் நோய் வாய்படும் மற்றும் இறக்கும் மாடுகளுக்கு சம்மாந்துறை பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதுடன் இம்மாடுகளின் சொந்தக்காரர்கள் இருப்பின் அவர்கள் தங்களின் மாடுதான் என்பதனை உறுதிப்படுத்துவதற்காக தங்களின் பகுதி கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் மாட்டுத் துண்டு (பண்ணைக் காட்) மற்றும் ஆள் அடையாள அட்டை என்பவற்றை ஒப்படைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இது தவிர தவறும் பட்சத்தில் பிரதேச சபையினால் பிடிக்கப்படும் மாடுகள் (கால் நடைகள்) பிரதேச சபை சட்டத்தின் கீழ் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சம்மாந்துறை பிரதேச சபை தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது.

# சாயி ஜனன நூற்றாண்டு முத்திரை பிரசாந்தி நிலையத்தில் கையளிப்பு

ஸ்ரீசத்ய சாயி பகவானின் ஜனன தின நூற்றாண்டை முன்னிட்டு, இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட ஞாபகார்த்த தபால் முத்திரையை, புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் வைபவரீதியாக கையளிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமையன்று இடம்பெற்றது. சத்ய சாயி பாபா (இலங்கை) அறக்கட்டளையகத்தின் சார்பில் தலைமை அறங்காவலர் எஸ். என். உதயநாயகன் அந்த முத்திரையை, புட்டபர்த்தி பிரசாந்தி நிலைய சத்ய சாயி பாபா மத்திய அறக்கட்டளையகத்தின் முகாமைத்துவ அறங்காவலர் ஆர்.ஜே.ரத்னகாரிடம் கையளிக்கின்றமை படத்தில் காணலாம்.







# முன்னேஸ்வரத்தில் கொடியேற்றம்

(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

புத்தளம் மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சிலாபம். முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவத்தில் கொடியேற்ற நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இதன்போது பிரதான குருவும் தர்மகர்த்தாவுமாகிய பிரம்ம ஸ்ரீ ச.பத்மநாபக் குருக்கள் கொடியேற்ற நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார். இதில் பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.


தொடர்ந்து நடைபெறும் இத்திருவிழாவில் இரதோற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.















# முன்னாள் போராளிகளுடன் நேரில் சுமந்திரன் பேசுவது தொடர்பில் சிலர் பீதியடைந்துள்ளனர்

## போராளிகளிடமே அதைக் கூறுகின்றார் அவர்

(ந.லோகதயாளன்)

முன்னாள் போராளிகளுடன் நான் பேசுவது தொடர்பில் சிலர் பீதியடைந்துள்ளனர் என தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

விசுவமடுவில் நேற்றைய தினம் முன்னாள் போராளிகளுடன் இடம் பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:–

முன்னாள் போராளிகளுடன் நான் பேசுவது தொடர்பில் சிலர் பீதியடைந்துள்ளனர்.

அத்தோடு இனப்படுகொலை நடந்தது என சுமந்திரன் ஏன் சொல்லவில்லை என்கின்றனர். 2013 ஆம் ஆண்டே இங்கு இடம்பெற்றது இனப்படுகொலைதான் எனப் பேசியவன் நான்தான். அதைச் சொல்ல வேண்டிய இடத்திலும் செய்தவனின் இடத்திலும் கூறினேன்.

இந்த விடயத்தில் நவநீதம்பிள்ளை அம்மா முதல், நிபுணர்குழுவினரின் அறிக்கை வரையிலும் அவர்களும் நுட்பமாகவே கையாண்டுள்ளனர். இருப்பினும் பிற கட்சிகள் முதல் பலர் நான் பிழையாகக் கூறுகின்றேன் எனத் தெரிவிக்கின்றனர். நான் பிழை என்றால் ஏன் இன்று வரை வேறு ஒருவரால் அதை செய்ய முடியாமல் உள்ளது? இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பது எனது வாதமே கிடையாது. அதனை நிரூபணம் செய்வது கடினம் என்பதே எனது கூற்று. அது தவறு என்பவர்களில் ஒருவர் கூட அதனை குற்றவியல் விசாரணைக்குக் கொண்டு செல்லவில்லை.

ஜனநாயக அரசியல் கட்சிகளில் கண்டிப்பாக பிரச்சினைகள் அல்லது பிளவுகள் ஏற்படும். ஆனால் தமிழ் அரசுக் கட்சியில் உள்கட்சி முரண்பாடு உள்ளதே அன்றி, கட்சி பிரிவினை கிடையாது. இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகள் ஆகட்டும், தமிழ் கட்சிகள் ஆகட்டும், ஆயுத வழியில் வந்த கட்சிகளாகட்டும் கண்டிப்பாக பிளவுகளே உள்ளன. ஆனால் தமிழ் அரசுக் கட்சியில் ஜனநாயகக் கருத்துக்கள் ரீதியாக உள்கட்சி முரண்பாடு உண்டுதான். ஆனால் மோதலோ பிரிவினையோ கிடையாது.

இதேநேரம் போராட்ட காலத்தில் நீங்கள் செய்த வீரத்தையும், உங்களின் தியாகத்தையும் தங்களின் வாக்குகளிற்காகப் பாவிப்பவர்களை நீங்கள் கடைசி வரை அனுமதிக்க கூடாது. நான் அதனை செய்வது கிடையாது. ஏனெனில் நான் ஆயுதம் ஏந்திப் போராடவில்லை. அதனால் ஆயுதப் போராட்டத்தைக் கூறி நான் வாக்குச் சேகரிக்க முடியாது.

இந்த அரசாங்கம் தொடர்பில் தற்போது எமது மக்களிடம் ஏற்பட்டுள்ள சலனம் மாற்றப்பட வேண்டும். உள்ளூராட்சித் தேர்தலில் ஓரளவு மாற்றம் இடம் பெற்றது. ஆனாலும் தற்போது இன்னுமோர் அழுத்தம் – "பிரஜா சக்தி" என்று ஓர் அழுத்தம் – வருகின்றது.

அதேபோன்று வடக்கில் மட்டும் மாகாண அமைச்சுகளிற்கு ஒவ்வொரு வரை போட்டுள்ளனர். அமைச்சர் என நியமிக்கவில்லை. ஆனால் ஆலோசகர் வடிவில் வருகின்றனர். இது தவறான நடவடிக்கை. – என்றார்.




**டேவிட் மில்லர்**

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
|---|---|---|---|
| 63 | 35 | 03 | 07 |

# இந்தியாவின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி!

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிராக நேற்று இரவு நடைபெற்ற சுப்பர்-8 போட்டியில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் 2024ஆம் ஆண்டு ரி-20 உலகக் கிண்ணத்திலிருந்து தொடர்ந்து வெற்றிபெற்று வந்த இந்தியாவின் வெற்றிப் பயணத்துக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக் கெட்தொடர் இலங்கை மற்றும் இந்தியா வில் நடைபெற்றுவருகிறது.

இதில், சுப்பர்-8 சுற்றின் மூன்றா வது போட்டியில் இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் நேற்று மோதின.

அஹமதாபாத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சி யில் வென்ற தெனனாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய தென்னாபிரிக்கா, 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடு மாறியது.

எனினும், பின்னர் மில்லர் - ப்ரேவிஸ் ஜோடி பொறுப்புடன் விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தது.

அதிரடியாக விளையாடிய ப்ரே விஸ் 45 ஓட்டங்கள் அடித்து ஆட்ட மிழந்தார். மறுமுறையில் சிறப்பாக விளையாடிய டேவிட் மில்லர் 63 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் முடிவில் தென்னா பிரிக்க அணி, 7 விக்கெட்டுகள் இழப் பிற்கு 187 ஓட்டங்களைக் குவித்தது.

கடைசி நேரத்தில் அதிரடியாக ஆடிய ஸ்டப்ஸ் 44 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்திய அணி சார்பாக சிறப்பா கப் பந்துவீசிய பும்ரா 3 விக்கெட்டு களை வீழ்த்தினார். அர்ஸ்தீப் சிங் 2 விக்கெட்டுகளையும் வருன் சக்கர வர்த்தி, சிவம் டுபே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 188 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங் கிய இந்திய அணி, ஆரம்பத்திலேயே ஆட்டம் கண்டது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாத இந்திய அணி, 18.5 ஓவர்களில் 111 ஓட்டங் களை மாத்திரமே பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணி, 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்திய அணியின் துடுப்பாட்டத் தில் அபிஷேக் சர்மா (15), சூர்யகுமார் (18), வாஷிங்டன் சுந்தர் (11), சிவம் டுபே (42), ஹர்த்திக் பாண்டியா (18) ஆகியோர் தவிர வேறு எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களைத் தொட வில்லை.

தென்னாபிரிக்கா சார்பாக பந்து வீச்சில், மார்கோ ஜன்சென் 4 விக் கெட்டுகளையும் கேஷவ் மஹாராஜ் 3 விக்கெட்டுகளையும் ஹொர்பின் போச் 2 விக்கெட்டுகளையும் எய்டன் மர்க்ராம் ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினர்.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்கா வின் டேவிட் மில்லர் தெரிவானார்.

இந்தப் போட்டியில் வென்றதன் மூலம், குழு -1இன் புள்ளிப்பட்டியலில் தென்னாபிரிக்க அணி முதலிடம் பிடித்தது.

## ரி-20 உலகக் கிண்ணம்: 'சுப்பர்-8'

### குழு 01 - புள்ளிப்பட்டியல்

| அணிகள் | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|
| தெ.ஆ. | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 3.800 |
| இந்தியா | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -3.800 |
| மே.இ.தீ. | - | - | - | - | - | - | - |
| சிம்பாப்வே. | - | - | - | - | - | - | - |

## ரி-20 உலகக் கிண்ணம் 'சுப்பர்-8': இன்றைய போட்டி

குழு-01

சிம்பாப்வே எதிர் மே.இ.தீ.

திங்கள் 23 பெப் 7 இரவு

மும்பை இந்தியா






# பல்லேகலவில் வீழ்ந்த 19 விக்கெட்டுகள்

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சுப்பர் – 8 சுற்றில் நேற்று மதியம் நடந்த போட்டியில் இங்கிலாந்து அணி 51 ஓட்டங்களால் இலங்கையை வீழ்த்தியது.

இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் மொத்தமாக 241 ஓட்டங்களையே (இங்கிலாந்து – 146, இலங்கை 95) பெற்றன.

அதேபோல இரு அணிகளதும் 19 விக்கெட்டுகள் (இங்கிலாந்து – 9, இலங்கை – 10) சாய்க்கப்பட்டன.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கை மற்றும் இந்தியாவில் கடந்த 7ஆம் திகதி தொடங்கியது.

தற்போது சுப்பர் – 8 போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில், நேற்று பிற்பகல் 3 மணிக்கு கண்டி – பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இலங்கை – இங்கிலாந்து அணிகள் களம் கண்டன.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடி இங்கிலாந்து அணியை இலங்கைப் பந்துவீச்சாளர்கள் தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

இதனால் அந்த அணி வீரர்களால் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை.

எனினும், பில் சால்ட் 62 ஓட்டங்களை அடித்துக்கொடுத்தார்.

இதனால், இங்கிலாந்து அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 146 ஓட்டங்களைச் சேர்த்தது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் டுமித் வெல்லகே 3 விக்கெட்டுகளையும், டில்ஷான் மதுசங்க, மஹீஸ் தீக்சன ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் தஸ்மந்த சமீர ஒரு விக்கெட்டையும் சாய்தனர்.

பின்னர் 147 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணி, இங்கிலாந்தின் பந்துவீச்சுத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் ஆரம்பம் முதலே தடுமாறியது.

இலங்கையின் துடுப்பாட்டத்தில் டுனித் வெல்லகே (10) கமிந்து மெண்டிஸ் (13), டசுன் ஷானக (30), மஹேஸ் தீக்ஷன (10 – ஆட்ட மிழக்காமல்) ஆகியோர் தவிர வேறெந்த வீரரும் ஒற்றையிலக்க ஓட்ட எண்ணிக்கையைக் கடக்கவில்லை.

இதனால், இலங்கை அணி 16.4 ஓவர்களில் 95 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன்மூலம் இங்கிலாந்து அணி 51 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இங்கிலாந்து சார்பாக பந்துவீச்சில் வில் ஜக்ஸ் மூன்று விக்கெட்டுகளைச் சாய்க்க ஜோவ்ரா அர்செர் (2), லியம் டவ்சன் (2), அடி ராஷிட் (2) மற்றும் ஜமி ஒவெர்டன் (1) ஆகியோர் எஞ்சிய விக்கெட்டுகளைச் சாய்த்தனர்.

ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் வெற்றிக்குப் பெரிதும் உதவிய பந்துவீச்சாளரான வில் ஜக்ஸ் தெரிவானார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இங்கிலாந்து அணி, குழு – 2இல் இரு புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது. இலங்கை அணி நான்காவது இடத்தில் உள்ளது.

## ரி-20 உலகக் கிண்ணம்: 'சுப்பர்-8'

### குழு 02 - புள்ளிப்பட்டியல்

| அணிகள் | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 2.550 |
| நியூஸிலாந்து | 1 | – | – | – | 1 | 1 | 0.000 |
| பாகிஸ்தான் | 1 | – | – | – | 1 | 1 | 0.000 |
| இலங்கை | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -2.550 |





# தமிழ் மண்ணில் தேசியம் ஒரு போதுமே விழாது!

## மதுரையில் துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

தமிழ் மண்ணில் தேசியம் ஒரு போதும் வீழாது என்று மதுரையில் துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம் பரனாருக்கு 150 அடி உயர சிலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா மதுரை, வண்டியூர் ரிங் வீதியில் புதிய நீதிக்கட்சியின் நிறுவனர் ஏ.சி. சண்முகம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் தொடர்ந்து உரை யாற்றுகையில்,

வ.உ.சிதம்பரனார் சிறை தண்ட னைக்குப் பிறகு வறுமையில் வாடிய நிலையிலும், ஒரு வழக்கறிஞர் கொடுத்த 5,000 ரூபா நிதியுதவியை ஏற்க மறுத்து, "வேலை கேட்டு வந்தேனே தவிர யாசகம் கேட்டு வரவில்லை" என்று தன்மானத்துடன் கூறியவர்.

வ.உ.சிதம்பரனார் போன்ற தியாகிகள் வாழ்ந்த தமிழ் மண்ணில் தேசியம் ஒருபோதும் வீழாது. தருமத்தை வீழ்த்தும் சக்தி உலகில் இல்லை.

5,000 ரூபாவைத் துச்சமென எண்ணிய வ.உ.சிதம்பரனாருக்கு சிலையை வழிபடுவதில் பெருமை கொள்கிறேன்.

வ.உ.சிதம்பரனாருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட வேண்டும்.

நாடாளுமன்ற வளாகத்தில் அவரது முழு உருவ வெண்கலச் சிலை அமைக்கப்பட வேண்டும்.

தூத்துக்குடி விமான நிலையத்திற்கு வ.உ.சிதம்பரனார் பெயரைச் சூட்ட வேண்டும்.

சென்னை பெரம்பூரில் அவர் கடைசியாக வாழ்ந்த வீட்டைத் தமிழக அரசு நினைவாலயமாக மாற்ற வேண்டும்.- என்றார்.

மத்திய இணை அமைச்சர் எல். முருகன், பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், இயக்குநர் சுந்தர் சி,நடிகர் விஜயகுமார், ஸ்ரீவைகுண்டம் செங்கோல் ஆதீனம் மற்றும் வ.உ.சி யின் வாரிசுகள் உள்ளிட்ட பலர் இவ்விழா வில் பங்கேற்றனர்.




# உத்தரப்பிரதேசத்தில் பூட்டப்பட்ட வீட்டினுள் ஒரே குடும்பத்தின் ஐந்து பேரின் சடலங்கள்!

உத்தரப் பிரதேசத்தில் பூட்டப்பட்ட வீட்டிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம், காஸ்கஞ்ச் பகுதியில் உள்ள வீடு ஒன்று கடந்த மூன்று நாட்களாக பூட்டப்பட்டிருப்பதை அக்கம்பக்கத்தினர் கண்டனர்.

உடனே இதுகுறித்து பொலிஸ ாருக்கு அவர்கள் தகவல் கொடுத்தனர். நிகழ்விடத்துக்கு விரைந்த பொலிஸார், வீட்டின் கதவை உடைத்து பார்த்தனர். வீட்டினுள் 5 பேரின் சடலங்கள் இருப் பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி யடைந்தனர். சத்யவீரின் சடலம் கயிறு ஒன்றில் தொங்கிய நிலையில் காணப் பட்டது.

மீதமுள்ள நான்கு சடலங்களும் படுக்கையில் ஒரு போர்வையின் கீழ் காணப்பட்டன. தடயவியல் குழு மற்றும் மோப்ப நாய் படை சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டது.

முதல்கட்ட விசாரணையில், சத்யவீர் தனது குடும்பத்தின் மற்றவர்களைக் கொன்றுவிட்டு பிறகு தானும் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று தெரியவந்துள்ளது.

சடலங்களை மீட்டு பொலிஸார் உடற் கூற்றாய்வுக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மரணத்துக்கான காரணம் கண்டறிய வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்று வருகிறது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் சடலங்களாக கண்டெடுக்கப்பட்ட சம்பவம் காஸ்கஞ்ச் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஈரான் அரசுக்கு எதிரான போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர் அந்த நாட்டு மாணவர்கள்!





ஈரானில் கடந்த மாதம் நடைபெற்ற போராட்டங்களின் போது நிகழ்த்தப்பட்ட கொடூரமான ஒடுக்குமுறைக்குப் பிறகு, தற்போது மீண்டும் அந்த நாட்டு மாணவர்கள் மிகப்பெரிய அளவில் அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

தலைநகர் தெஹ்ரானில் உள்ள ஷெரீப் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல கல்வி நிறுவனங்களில் திரண்ட மாணவர்கள், “சர்வாதிகாரி ஒழியட்டும்” போன்ற முழக்கங்களை எழுப்பிப் பேரணிகளை நடத்தினர்.

இந்தப் போராட்டங்களின் போது அரசு ஆதரவாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஆங்காங்கே மோதல்கள் வெடித்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற வன்முறையில் சுமார் 7,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்று மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கும் நிலையில், அந்தப் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும், தங்களின் உரிமைகளை வலியுறுத்தியும் மாணவர்கள் இந்தத் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மறுபுறம், ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்த பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டாலும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரான் மீது இராணுவத் தாக்குதல் நடத்துவது குறித்து ஆலோசித்து வருகிறார்.

அடுத்த பத்து நாள்களுக்குள் சுமூகமான உடன்பாடு எட்டப்படாவிட்டால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எச்சரித்துள்ளதால், ஈரான் தற்போது ஒரு போருக்கான சூழலை எதிர்கொண்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இயங்கும் சில எதிர்க்கட்சிகள் இந்தத் தாக்குதலை ஆதரித்தாலும், ஈரானுக்குள் இருக்கும் மற்றொரு தரப்பினர் வெளிநாட்டுத் தலையீட்டை கடுமையாக எதிர்க்கின்றனர்.

பொருளாதார நெருக்கடியால் தொடங்கி தற்போது ஆட்சி மாற்றத்தை நோக்கிய ஒரு பெரிய புரட்சியாக இந்தப் போராட்டங்கள் உருவெடுத்துள்ளதால், ஈரான் அரசு பெரும் அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ட்ரம்பின் வீட்டுக்குள் நுழைந்த மர்ம நபர் சுட்டுக் கொலை!

## அதிரடியாகக் களமிறங்கியுள்ள எவ்.பி.ஐ.



அமெரிக்க ஜனாதிபதி, டொனால்ட் ட்ரம்பின் மார் - எ - லாகோ வீட்டின் பாதுகாப்பான வீட்டு வளாகத்துக்குள் நுழைந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்க இரகசியப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் எவ்.பி.ஐ. அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புளோரிடாவின் பாம் பீச்சில் உள்ள ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் மார்-எ-லாகோ இல்லத்துக்குள் நுழைய முயன்ற 20 வயதுடைய ஒருவரைச் சுட்டுக் கொன்றதாக அமெரிக்க இரகசிய சேவை தெரிவித்துள்ளது. அந்த நேரத்தில் ஜனாதிபதி டிரம்ப், வாஷிங்டன் டி.சியில் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டின் பாதுகாப்புச் சுற்றாடலுக்குள் நுழைந்த அந்த நபரை பாம் பீச் கவுண்டி ஷெரிப் அலுவலகத்தைச் சேர்ந்த முகவர்களும் துணை அதிகாரியும் எதிர்கொண்டனர் என்று கூறப்படுகின்றது.

பெட்ரோல் கெனிஸ்டர் மற்றும் துப்பாக்கியை எடுத்துச் சென்ற குறித்த நபரைப் பாதுகாப்பு அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போதே குறித்த நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் அந்த சந்தர்ப்பத்தில் தாங்கள் கமராக்கள் அணிந்திருந்ததாகவும் தாக்குதல் நடத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சுடப்பட்ட நபரின் அடையாளம் அல்லது அவர் உள்ளே நுழைய முயன்ற சூழ்நிலைகள் இன்னும் தெரியவில்லை. எத்தனை துப்பாக்கிச் சூடுகள் சுடப்பட்டன, அல்லது அந்த நபரின் துப்பாக்கியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட நபரின் நோக்கம் இன்னும் முழுமையாகத் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், டொனால்ட் ட்ரம்பைப் பாதுகாக்கும்போது ஆயுத மேந்திய சந்தேக நபர்களை அதிகாரிகள் தாக்குவது இது முதல் முறை அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஜூலையில், பென்சில்வேனியாவின் பட்லரில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் ட்ரம்ப் பேசிக் கொண்டிருந்த போது, ஒருவர் அவரை நோக்கிச் சுட்டார்.

இதன்போது ட்ம்பின் காதில் துப்பாக்கிச் சூடுபட்டதில் காயம் ஏற்பட்ட நிலையில், அதிகாரிகள் நடத்திய பாதுகாப்பு தாக்குதலில் 20 வயதான தாமஸ் மேத்யூ க்ரூக்ஸ் என்ற தாக்குதல்தாரி கொல்லப்பட்டார். மேலும் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 23.02.2025

## மேஷம்

கணவனின் வருமானம் அறிந்து மனைவிமார்கள் செலவு செய்ய வேண்டும். இல்லை என்றால் வட்டிக்கு கடன் வாங்கி திரும்ப செலுத்த இயலாமல் கஷ்டப்பட வேண்டிய நிலை உருவாகலாம். சந்திர பகவானின் அனுக்கிரகத்தால் தொழிலில் கணிசமான லாபம் கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் பார்ப்பீர்கள். உட்காரக்கூட நேரமில்லாமல் பொருளாதாரத்தைப் பெருக்க ஓயாது வேலை பார்ப்பீர்கள். கண்ட இடங்களில் சாப்பிட்டு வயிற்றை கெடுத்துக் கொள்ளாதீர்கள். கணவன் மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடு விலகி சகசமான நிலை ஏற்படும். பெற்றோரின் மனநிலையில் புரிந்து பிள்ளைகள் நடந்து கொள்வார்கள். மங்கள காரியங்களால் வீட்டில் கலகலப்பு கூடும். விருந்தினர்கள் வருகையால் வீடு களை கட்டும். விவசாய உற்பத்தியில் அதிக முனைப்பு காட்டுவீர்கள். தென்னந்தோப்புக்கு நடுவே வீடு கட்டுவீர்கள்.

## ரிஷபம்

யாருக்காக நீங்கள் பாடுபடுகிறீர்களோ அவர்களே உங்களை புரிந்து கொள்ளாமல் மனம் நோகும்படி நடந்து கொள்வார்கள். மிக கவனமாக செயல்பட வேண்டிய காலம். சின்ன சின்ன விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. சந்திர பகவான் நல்லது கெட்டது என கலந்து இந்த வாரத்தில் உங்களுக்கு பலனை கொடுப்பார். திட்டம் போட்டு செய்யும் தொழிலில் சில சறுக்கள் ஏற்படலாம். ஆசை வார்த்தை காட்டும் நண்பர்களை அதிகம் நம்ப வேண்டாம். அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள ஆடம்பரமாக செலவு செய்வீர்கள். எதிர்பார்த்த இடத்தில் தாமதம் இன்றி பணம் கிடைக்கும். தொழில் வேகமாக வளர்ச்சி அடையும். குடும்பத்தில் உங்கள் திறமையை காட்ட முயற்சி செய்தால் மனைவி கோபித்துக் கொண்டு தாய் வீட்டுக்கு சென்று விடுவார். பணத்தட்டுப்பாடு தலைக்கு மேல் போகும் நேரம் இது. முயற்சிகளுக்கு இருந்த முட்டுக்கட்டைகள் தானாக விலகும். குலதெய்வ வழிபாடு செய்வீர்கள்.

## மிதுனம்

பூர்வீக சொத்தில் சகோதர சகோதரிகளால் வில்லங்கம் உண்டாகும். அதை நிவர்த்தி செய்வதற்காக நீதிமன்றத்தை நாடி செல்வதற்கான கட்டாயம் ஏற்படும். உலவுகின்ற நிலவும் உங்களுக்கு அனுசரணையாக இல்லாததால் எதிர்பாராத செலவுகள் வந்து கையில் இருந்த காசுக்கு வெடி வைக்கும். ெ தொழில் துறைகள் சீராக நடக்கும். வியாபாரத்தில் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாத நிலை உண்டாகும். உறவினர் வகையில் ஏதாவது வில்லங்கம் வந்து மன அமைதியை கெடுக்கும். எப்படிப்பட்ட இடையூறுகள் தொழிலில் ஏற்பட்டாலும் அதை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். அரசாங்க ஒப்பந்த வேலைகளில் கால தாமதமாகும். நண்பர்களின் உதவியால் வெளிநாடு செல்வீர்கள். எதிர்பாராத பண வரவு திக்கு முக்காட வைக்கும்.

## கடகம்

நடந்து செல்லும் இடமெல்லாம் நந்தவனமாக பூத்து சிரிக்கும் காலம் இது. எந்த தொழிலை தொட்டாலும் ஏற்றத்தை கொடுக்கும். உங்களின் செல்வாக்கும் புகழும் வெளியிடங்களில் கொடி கட்டி பறக்கும். நினைத்ததை நடத்தி முடிப்பதற்கு உறவினர்களும் நண்பர்களும் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். சந்திர பகவான் வியாபார வெற்றிக்கு உறுதுணையாக நிற்கிறார். விவசாய தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள். வழக்கறிஞர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள் தங்களுடைய புகழை நிலை நாட்டுவார்கள். வேலை தேடியவர்களுக்கு நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் இருந்த தடைகள் அகலும். சுப காரியங்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வீட்டில் விருந்த நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி பொங்கு வழியும். அரச ஆதரவு புதிய ஒப்பந்தங்கள் பெறுவதற்கு வழிவகுக்கும். அழகு பொருள் விற்பனை செய்பவர்கள்,

## சிம்மம்

பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த இரவு பகலாக உழைப்பீர்கள். புதிய முதலீடுகள் மூலம் தொழிலை விரிவுபடுத்தி உற்பத்தி பெருக்கத்தை உண்டு பண்ணுவீர்கள். சந்திரனின் இடப்பெயர்ச்சிகள் சிறப்பான பலன் களையே தரப்போகின்றன. பழைய கடன்கள் மள மள என்று வசூல் ஆகும். சிறு வியாபாரிகள் அபிரிமிதமான லாபத்தை பார்ப்பார்கள். அலங்கார பொருள் விற்பனை அமோக பலனை கொண்டு வரும். கலைத்துறையினருக்கு பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்தும். வெளிநாட்டில் தங்கள் திறமையை காட்டி பெரிய லாபத்தை அடைவார்கள். வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் தொழிலில் சாதனை படைப்பார்கள். பிள்ளைகள் படிப்பில் அக்கறை காட்டி பெற்றோரை பெருமைப்படுத்துவார்கள். எதிர்ப்புகளை இருந்த இடம் தெரியாமல் செய்வீர்கள்.

## கன்னி

கூட இருந்தே உங்களை கெடுக்க நினைத்த உறவினர்களின் உள் நோக்கத்தை இந்த வாரத்தில் தெளிவாக புரிந்து கொள்வீர்கள். அவர்களிடம் இருந்து விலகி இருப்பது மிகவும் நல்லது. சந்திரனின் இடப்பெயர்ச்சியும் அவ்வளவு சாதகமான நிலையில் இல்லை. முதலீட்டுக்கு தகுந்த வருமானம் கிடைப்பது சற்று சிரமம்.

புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். பதவி உயர்வு கிடைக்கும். நடைபாதை வியாபாரிகள் சிறப்பான பலனை அடைவார்கள். கலை துறையினர் பிரபலமடைவார்கள். கல்விக்காக அதிகம் செலவு செய்வீர்கள். தாய் வழி சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. எவ்வளவு தான் இணக்கமாக நடந்தாலும் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் தாண்டவம் ஆடும். வாக்கு கொடுத்தால் கண்டிப்பாக அதை காப்பாற்ற வேண்டும்.

## துலாம்

உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணும் கூட்டம் உங்களுக்கு ஆசை வார்த்தை சொல்லும். அதில் மயங்கி இருப்பதை இழந்து விடாதீர்கள். வளர்பிறை சந்திரன் நீங்கள் செய்யும் வியாபாரத்துக்குப் பல வகையில் உதவியாக இருப்பார். இரு மடங்கு எச்சரிக்கையோடு எதையும் செய்யுங்கள். நல்ல நண்பர்களே விரோதியாக மாறி தொழிலுக்கு இடையூறு செய்வார்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழிலை சிறப்புடன் நடத்துவீர்கள். வேலைக்காக நீங்கள் செய்திருந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதில் சுணக்கம் உண்டாகும். அலைச்சல் அதிகமாகி உடல் சோர்வு உண்டாகும். கொடுத்த இடத்தில் பணம் திரும்பி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். ஏதாவது வீட்டுச் செலவு வந்து பொருளாதார சிக்கலை உண்டாக்கும். வியாபாரம் மந்தமான நிலையில் நடக்கும். குடும்பத்தில் குழப்பமான நிலையே காணப்படுகிறது.

## விருச்சிகம்

செலவுகளை கட்டுப்படுத்த எவ்வளவு முயற்சி செய்தாலும் அதில் உங்களுக்கு தோல்விதான் கிடைக்கும். புதிதாகத் தொடங்கும் தொழிலுக்கு நண்பர்களின் உதவி தாராளமாக கிடைக்கும். போட்டி போட்டு தொழிலில் வெற்றி கண்டு எதிரிகளை பொறாமைப்பட வைப்பீர்கள். போட்டி பந்தயங்களில் மிகப்பெரிய லாபத்தை அடைவீர்கள். சொந்த பந்தங்களால் மனச்சங்கடம் அடைவீர்கள். கலைத்துறையினருக்கு பொற்காலம். சனி 7 ஆம் வீட்டில் இருக்கிறார். துணி வியாபாரிகள் துணிவோடு தொழிலில் இறங்கி அதிக மேன்மை அடைவார்கள். உங்களின் வளர்ச்சியை கண்டு எதிரிகள் வாயடைத்து நிற்பார்கள். தேவையில்லாத செலவுகளால் கையிருப்பு கரையும். வியாபாரத்திற்கு இடையூறாக இருந்த வில்லங்கங்கள் விலகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.02.2025



தனுசு

துணிச்சலுடன் தொழிலை மேம் படுத்துவீர்கள். வளர் நிலவின் வசந்த ஒளி உங்கள் வாழ்க்கை பாதையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். இழுபறியாக இருந்த இடப்பிரச்சனையை புத்திசாலித்தனமாக தீர்ப்பீர்கள். தாய் மாமன் வகையில் சில சங்கடங்கள் வரலாம். உறவினர்களுடன் ஒருமைப்பாட்டோடு நடந்து கொள்ளுங்கள். நினைத்த காரியத்தை நண்பர்களில் உதவியோடு சிறப்பாக முடிப்பீர்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழில் மிகுந்த லாபத்தை கொடுக்கும்.

ஏதாவது ஒரு பிரச்சனை குடும்பத்தில் உருவாகி மன நிம்மதியை கெடுக்கும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்க விருந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள். நீண்டகால மனக் கவலை உங்களை விட்டு நீங்கும். புதிய உறவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.



கும்பம்

பொருளாதாரத்தில் எதிர்பார்த்த வெற்றியை அடைந்து பூரிப்புக் கொள் வீர்கள். நீண்ட காலமாக இழுவையில் இருந்த வழக்கை முடித்து வைப்பீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில முன் னேற்றமான பலன்களை கொண்டு வரும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வியாபாரத்தில் பல வெற்றிகளை அடைவீர்கள்.

பிள்ளைகள் படிப்பில் அதிக அக்கறை காட்டுவார்கள். கல்வி செலவு அதிகரித்து கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். உறவினர்களும் நண்பர்களும் உதவிகரமாக இருப்பார்கள். மனம் விட்டு பேசி குடும்ப பிரச்சினையைத் தீர்ப்பீர்கள். காதல் கைகூடி வந்து நீண்ட காலக் கனவு நிறைவேறும்.

கடல் கடந்து பயணம் செல்லக் கூடிய வாய்ப்பை நண்பர் ஏற்படுத்தித் தருவார். எதிர்பாராத தன வரவு உண்டாகும்.



மகரம்

உடைந்து போன உறவுகளை ஒட்ட வைப்பதற்காக பாடுபடுவீர்கள். மனைவியின் தேவையறிந்து நடந்து கொண்டு மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். எதிர்பாராத வகையில் பணம் வரு வதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆடம்பரமாக செலவு செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். தொழிலுக்கு இருந்த இடையூறுகளை தகர்த்து எறிவீர்கள். வேலை இடத்தில் எச்சரிக்கையாக இருங்கள். வீட்டில் மங்கல காரியங்கள் சிறப்பாக நடக்கும்.கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் கவனமாக இருங்கள். படித்துப் பார்த்து பத்திரங்களில் கையெழுத்து போடுங்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பொருளாதாரம் முன்னேற்றம் காண்பீர்கள். பிள்ளைகளால் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டிவரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள்.



மீனம்

எதிர்ப்புகளை முறியடித்து தொழிலை நிலைப்படுத்த முனைப்போடு செயல் படுவீர்கள். கூட்டுத் தொழிலில் ஈடுபட அதிக ஆர்வம் காட்டுவீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில நேரங்களில் பாதகமான நிலையை ஏற்படுத்தலாம். பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். செவ்வாய் 7 ஆம் இடத்தில் இருக்கிறார்.

உங்கள் எண்ணப்படி திருமண விடயம் சுலபமாக நடக்காது. சுக்கிரன் 5 ஆம் வீட்டில் இருக்கிறார். கலைத் துறையினர் சில சிரமங்களை சந்திக்க வேண்டிவரும்.

கட்டுமான தொழில் கை கொடுத்து தூக்கிவிடும். இரும்பு சம்பந்தப்பட்ட வியாபாரங்கள் அமோகமாக நடக்கும். ராகு ராசியிலேயே அமர்ந்திருக்கிறார். மனைவி மக்களின் போக்கு மனதை காயப்படுத்தும். பொறுமையாக நடந்து கொள்ளுங்கள்.



# மகாவலி பெருக்கெடுக்கும் ஆபத்து!

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் மகாவலி கங்கைப் பள்ளத் தாக்கு பகுதிகளுக்கான செம்மஞ்சள் நிறத்திலான முதலாம் இலக்க வெள்ள அபாய எச்சரிக்கை நேற்று விடுக்கப் பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையானது இன்று திங்கட்கிழமை நள்ளிரவு 12.00 மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாவலி கங்கையின் சில நீரேந்துப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு முதல் பெய்து வரும் மழைவீழ்ச்சி காரணமாக, அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் மகாவலி கங்கையை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் சிறு வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கிண்ணியா, மூதூர், சேரு வில, வெலிகந்த, லங்காபுர, தமன் கடுவ, திம்புலாகல ஆகிய பிரதேச செய லகப் பிரிவுகள் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கும் என்றும் எச்சரிக்கப்பட் டுள்ளது.